<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>
<u>அசல் வழக்கு எண்.39/2020</u>

**2023–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09–ம் நாள் புதன் கிழமை** வாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **திரு. S. தெய்வீகன், உதவியாளர்**, என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விஸ்வநாதன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : பெரியசாமி | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | : பசும்பலூர் | சமயம் | : |
| சாதி | : | வயது | : 62/2023 |

**முதல் விசாரணை :**

1 (i) நான் இவ்வழக்கில் முதலாவது வாதியாவேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக எனக்காகவும், 2–ம் வாதிக்காகவும் சேர்த்து தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். 30.04.2002–ம் தேதியிட்ட என்னுடன் 1–ம் பிரதிவாதியின் தகப்பனார் அய்யாசாமி என்பவரும், 2–ம் பிரதிவாதியும் சேர்ந்து எழுதிக்கொடுத்த உடன்படிக்கை பத்திரத்தின் அசல் ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவா வண்டிப்பாதை பொருத்து மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

(ii) நில அளவைத்துறையால் வழங்கப்பட்ட தாவா சொத்து மற்றும் அதன் அருகில் உள்ள சொத்தின் மாதிரி வரைபடத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) தாவாபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

பிரதிவாதிகள் தரப்பில் தோன்றா தரப்பினர் ஆகி விட்டதால், எனவே குறுக்கு விசாரணை இல்லை.